
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • நவம்பர் 16, 2019

Weekly E-paper • NOVEMBER 16, 2019

GOVERNMENT OF INDIA

REPORT

OF THE


BACKWARD CLASSES COMMISSION

First Part

Volumes I & II

1980





## மண்டல் அறிக்கையும் மதவாத அரசியலும்

வெற்றிச்செல்வன்



### நீதி வேண்டும் பாத்திமாவுக்கு!

தலையங்கம்



### நம்பிக்கை தரும் திமுக பொதுக்குழுத் தீர்மானங்கள்

தம்பி பிரபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • நவம்பர் 16, 2019 Weekly E-paper • NOVEMBER 16, 2019


# மண்டல் அறிக்கையும் மதவாத அரசியலும்

• வெற்றிச்செல்வன்

***மூ**வாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் வருணாசிரமத்தின் அடிப்படையிலான சமூகக் கட்டமைப்பு, இந்தியாவில் பல்வேறு சாதிகளின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.*

**- மண்டல் குழு அறிக்கை, தொகுதி ஒன்று, ப.16.**



*1979 ஆம் ஆண்டு, மொரார்ஜி தேசாய் தலைமையிலான அரசு, அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 340 இன் கீழ், கல்வியிலும், சமூகத்திலும் பிற்படுத்தப்பட்டவர்களின் நலன்களைக் குறித்து ஆராய, பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அக்குழு அதன் தலைவரின் பெயரால் மண்டல் குழு என்று அழைக்கப்பட்டது. மண்டல் குழு தனது அறிக்கையை 1980 ஆம் ஆண்டு சமர்ப்பித்தது. மொத்தம் 3,743 சாதிகளைப் பிற்படுத்தப்பட்ட சாதிகளாக அடையாளம் காட்டிய மண்டல் குழு, அவை பின்தங்கிய நிலையில் இருப்பதற்குக் காரணம் சாதியே என்று தனது பரிந்துரையில் குறிப்பிட்டது. மண்டல் குழுவின் கணக்குப்படி, இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட மக்களின் விழுக்காடு 52% ஆகும். ஆனால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நடுவண் அரசின் வேலைவாய்ப்பில் 12.55% மட்டுமே பெற்றிருந்தனர் என்றும் மண்டல் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டது.*

*நடுவண் அரசின் பணிகளில் பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு 27% இடஒதுக்கீடு வழங்குவதே இந்தச் சமத்துவமற்ற நிலையைப் போக்குவதற்கான வழி என்றும் மண்டல் குழு பரிந்துரை செய்தது.*

*ஜனதா அரசுக்குப் பின்னர் வந்த இந்திரா மற்றும் இராஜிவ் காந்தியின் அரசுகள், மண்டல் குழுவின் பரிந்துரைகளைக் கிடப்பில் போட்டன. 1989 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு, மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும் ஆணையை 13.08.1990 இல் வெளியிட்டது.*

*இந்த அறிவிப்பினை அடுத்து, இந்தியாவின் வட மாநிலங்களில் மிகப்பெரும் போராட்டங்கள் வெடித்தன. தில்லிப் பல்கலைக்கழக மாணவர் இராஜிவ் கோஸ்வாமி தீக்குளித்தார். தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதில் 62 பேர் உயிரிழந்தனர். கலவரங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில், 50*

> **“ மண்டல் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நிறைவேற்றிட நடுவண் அரசு முன்வர வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானத்தை 12.05.1989 அன்று தமிழக சட்டப்பேரவையில் முன்மொழிந்தவர் கலைஞர்.**

*பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன் பேணிக்காக்கப்படுவதைக் கண்ட பார்ப்பனீயம் தனது வழக்கமான கலவர ஆயுதத்தைக் கையிலெடுத்தது. ஆம்! நேரடியாக இட ஒதுக்கீட்டை எதிர்க்க முடியாத பாஜக, இராமர் கோயில் விவகாரத்தைக் கையிலெடுத்தது. 1990 செப்டம்பர் 25 அன்று அத்வானி அயோத்தியில் இராமர் கோயில் கட்ட வலியுறுத்தி இரத யாத்திரையைத் தொடங்கினார். வெறுப்பரசியலை வளர்க்கும் நோக்கத்துடன், மத உணர்வைத் தூண்டும் வகையில் நடைபெற்ற இரத யாத்திரை, பீகார் மாநிலத்தில் தடுத்து நிறுத்தப்பட்டது. லாலு பிரசாத்தின் அரசு, அத்வானியைக் கைது செய்தது. ஆனாலும், இரத யாத்திரையின் தூண்டுதலால் உத்தரப்பிரதேசத்தில் குவிந்த கரசேவகர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். பாபர் மசூதியைத் தகர்க்க முற்பட்டனர். அப்போது*

தொடர்ச்சி மறுபக்கம்...

...முன்பக்கத் தொடர்ச்சி





இராணுவத்திற்கும், கரசேவகர்களுக்கும் நடைபெற்ற மோதலில், 20 கரசேவகர்கள் உயிரிழந்தனர். அவர்களது உடல்கள் சாம்பலாக்கப்பட்டு, பானைகளில் சாம்பல் சேகரிக்கப்பட்டது. சாம்பல் சேகரிக்கப்பட்ட பானைகளை உத்தரப்பிரதேசத்தின் வீதிகளில் விசுவ இந்து பரிசத் அமைப்பினர் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். மாண்டு போன தியாகிகளுக்காகப் பழிவாங்க வேண்டும் என்று இந்துக்கள் தூண்டப்பட்டனர். இசுலாமியர்களின் இருப்பிடங்கள் சூறையாடப்பட்டன. இசுலாமியர்கள் கொல்லப்பட்டனர். இரத யாத்திரை 'இரத்த' யாத்திரையானது.

அத்வானி கைது செய்யப்பட்டதால் ஆத்திரம் அடைந்த பா.ஜ.க. தனது ஆதரவை விலக்கிக் கொண்டதையடுத்து, வி.பி. சிங் அரசு கவிழ்ந்தது. நாடாளுமன்றத்தில் வி.பி. சிங் அரசு மீதான நம்பிக்கைத் தீர்மானத்துக்கு ஆதரவாக இருந்தது தி.மு.க. ஆனால் வாக்களிக்க தி.மு.க.விடம் எம்.பி.க்கள் இல்லை. ஆனால் அ.தி.மு.க.வின் ஏராளமான எம்.பி.க்கள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தனர். 1991 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வின் மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை 85இல் இருந்து, 120ஆக உயர்ந்தது. பா.ஜ.க. என்னும் மரம் கலவரத்தைத் தூண்டாமல் காய்த்ததே இல்லை என்பது வரலாறு.

இதனிடையே, மண்டல் குழு வழக்கில் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை 16.11.1992 அன்று வழங்கியது. ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வில், ஆறு பேர் மண்டல் குழுவின் பரிந்துரைகளுக்கு ஆதரவாகவும், மூவர் எதிராகவும் தீர்ப்பளித்தனர். இறுதியில் பெரும்பான்மை அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. மண்டல் குழுவின் பரிந்துரைகளின்படி, நடுவண் அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இட ஒதுக்கீடு வழங்கி, வி.பி. சிங் பிறப்பித்த உத்தரவு செல்லும் என்றும், 1991 இல் பொருளாதார அடிப்படையில் 10% இட ஒதுக்கீடு வழங்கிய காங்கிரஸ் அரசின் உத்தரவு செல்லாது என்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியது. எனினும் இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டைத் தாண்டக் கூடாது என்று தீர்ப்பில் சொல்லப்பட்டது, தமிழகத்தில் 1980 முதல் 12 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த 69% இட ஒதுக்கீட்டிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, திராவிடர் கழகத்தின் தொடர் முயற்சியாலும், போராட்டத்தாலும், அரசியலமைப்புச் சட்டத்தின் 31 சி பிரிவின்கீழ் தமிழக அரசால் தனிச்சட்டம் இயற்றப்பட்டு, தமிழகத்தின் இட ஒதுக்கீடு உரிமை பாதுகாக்கப்பட்டது என்பது தனி வரலாறு.

> "
> **சமூக நீதி மாநாடு, 2018**
> **தீர்மானம் 6:**
> **மாநில மற்றும் நடுவண் அரசுப் பணியிடங்களில் இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும் முறையைக் கண்காணித்து, அரசிற்கு ஆண்டுதோறும் அறிக்கை அளிக்கப்படவேண்டும்.**

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு 27 ஆவது ஆண்டை எட்டும் இந்த வேளையிலும், நடுவண் அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோரின் விழுக்காடு 15% கூடத் தாண்டவில்லை என்பது மாபெரும் அநீதி. இதனைக் களைய வேண்டும் என்பதை வலியுறுத்தவே 2018ஆம் ஆண்டு நடைபெற்ற திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சமூக நீதி மாநாட்டில் இட ஒதுக்கீடு வழங்கப்படுவதைக் கண்காணிக்கும் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப் பட்டது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் தீர்ப்பின் நோக்கம் நிறைவு பெறும். ஆயிரமாண்டு கால அநீதிக்குத் தீர்வு கிடைக்கும். ●


# கருஞ்சட்டைப் பதிப்பகம்

**இணையத்தள விற்பனை (online sales)**

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

# திராவிட இயக்கத் தமிழர் பேரவை

பொதுச்செயலாளர்

## தோழர் சுப. வீரபாண்டியனின்

இவ்வாரச் சுற்றுப்பயண விவரம்-2019 நவம்பர்

### சூலூர்

16-11-2019, மாலை 5 மணி, புலவர் செந்தலை கவுதமனின்

**“பெயரில் மட்டுமா பெரியார்?”**

நூல் வெளியீட்டு விழா

★★★

### திருப்பூர்

16-11-2019, இரவு 7 மணி

திமுக பொதுக்கூட்டம்

★★★

### கோவை

17-11-2019, மாலை 6 மணி

**வேலாண்டிபாளையத்தில் சங்கமம்**
**15 ஆவது ஆண்டுவிழா**

★★★

### காளியப்பக்கவுண்டனூர்

18-11-2019, மதியம் 12 மணி

**மக்களுடன் ஒரு சந்திப்பு**

★★★

### பொள்ளாச்சி

18-11-2019, மாலை 6 மணி

**திமுக கருத்தரங்கம்**

★★★

### சென்னை

21-11-2019, மாலை 6.30 மணி, பெரியார் திடல்

**"நெஞ்சுக்கு நீதி 14"** தொடர் சொற்பொழிவு

★★★

### சென்னை

22-11-2019, மாலை 6 மணி, கொளத்தூர் இலக்கிய வீதி நடத்தும்

**இலக்கியக் கூட்டம்** ‘ பாவலர் பல்லவன் கவிதைகள் ’

★★★

### சென்னை

23-11-2019, மாலை 6 மணி, இராயப்பேட்டை

**‘திப்பு சுல்தான்’ பிறந்தநாள் விழா**

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## நீதி வேண்டும் பாத்திமாவுக்கு!



ஏறத்தாழ மத்தியில் பாஜக ஆட்சி அமைந்த பிறகு நாட்டின் அமைதி சீர்குலைந்த நிலைக்கு வந்துவிட்டது.

குறிப்பாகக் கல்வியைக் கூறலாம். கல்வி நிலையங்களும் அப்படித்தான் இருக்கின்றன.

சென்னை ஐஐடி வளாகத்தில் மே 4, 2011 அன்று நிதின் ரெட்டி தொடங்கி, நவம்பர் 9, 2019 வரை 11 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

காரணம் அவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தங்கள், உளைச்சல்கள் என்று தெரியவருகிறது. கடைசியாக அவ்வளாகத்தில் தற்கொலை செய்துகொண்ட மாணவி 18 வயதான பாத்திமா லத்தீப். இவர் முதுகலை முதலாமாண்டு படித்துக் கொண்டிருந்தவர்.

ஐஐடி வளாகம் தொடர்ந்து சர்ச்சைக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது என்பது உலகறிந்த செய்தி.

கடந்த காலங்களில் இறைச்சி சாப்பிடக்கூடாது என்றும், அப்படிச் சாப்பிடும் மாணவர்கள் தனிமைப் படுத்தப் பட்டார்கள் என்றும், இதுபோன்ற சாதி, மதவாதச் சிந்தனைகளும் நடைமுறைகளும் ஐஐடி வளாகத்தில் இருந்தன என்பதை அறிவோம்.

இன்றும் அதே போக்குதான் தொடர்கிறது என்பதற்குப் பாத்திமா லத்தீப் சான்றாக இருக்கிறார்.

இவரின் அம்மா பேசும்பொழுது வட இந்தியாவில் படிப்பதற்கு வாய்ப்பு இருந்தும்கூட அங்கு அனுப்ப எங்களுக்கு விருப்பம் இல்லை. காரணம் அங்கு மதவாதம் தலைதூக்கி ஆடுகிறது. என் மகள் முஸ்லீம் என்பதால் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் அந்த நிலை இல்லை என்பதனால், பாதுகாப்பாக இருப்பாள் என் மகள் என்று சென்னை ஐஐடிக்கு அனுப்பி வைத்தோம். இப்பொழுது பிணமாக இருக்கிறாள் என்று சொன்ன செய்தி சிந்திக்கத்தக்கது.

பாத்திமா லத்தீப் தொடர்ந்து மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். சுதர்சன் பத்மநாபன் என்ற பேராசிரியர் கொடுத்த மனஉளைச்சலினால் தற்கொலை செய்துகொள்வதாக தன் மரண வாக்குமூலமாகத் தந்திருக்கிறார் பாத்திமா.

அவருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அவரின் மரணத்திற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும்.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம் என்ற பார்வையில் ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தங்களை மாணவர்களிடமும் திணிக்கும் வேலையை பாஜக செய்து கொண்டிருக்கிறது. இது ஆபத்தானது.

# நம்பிக்கை தரும் திமுக பொதுக்குழுத் தீர்மானங்கள்

தம்பி பிரபு

ஒரு மாபெரும் இயக்கம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதற்கு அதன் அடிநாதமாக விளங்கக்கூடிய கொள்கைகள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருப்பது அவசியம்.

அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைந்ததை அறிஞர் அண்ணா மற்றும் தலைவர் கலைஞரின் மாநில உரிமைக்கான மேற்கொள்களைச் சுட்டிக்காட்டி அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளைத் திருத்தவோ, அடிப்படைப் பண்புகளைச் சிதைக்கவோ கூடாது எனப் பொதுக்குழு வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. மாநில உரிமைகள் கேள்விக்குள்ளாகும் இவ்வேளையில், மாநில சுயாட்சி அதிகாரத்துடன் திகழ கலைஞர் அமைத்த இராசமன்னார் குழு அளித்த பரிந்துரைகளை நினைவூட்டியது பொதுக்குழு.

நாட்டை 200 கூறுகளாகப்(ஜன்பத்) பிரித்து ஒரு கூட்டுக்குள் வைத்து நிர்வகிக்கும் ஆர்.எஸ்.எஸ்.இன் சூழ்ச்சிக்கு அடிபணியாது இத்திட்டத்தைக் கைவிட வேண்டுமெனப் பொதுக்குழு கேட்டுக்கோண்டுள்ளது. ஒரு சாமானியனின் பார்வையில் இதெல்லாம் கண்ணுக்குப் புலப்படாது. ஆனால் அந்த சாமானியனின் பாதுகாவலனாகத் திகழும் திராவிட முன்னேற்றக் கழகம் இதைத் தக்க சமயத்தில் கையிலெடுத்து இந்திய அரசியல் கட்சிகளுக்கு எல்லாம் முன்னோடியாக முதன்முதலாக எச்சரித்திருப்பது பாராட்டுக்குரியது மட்டுமல்ல, ஒரு சாமானியனின் பார்வையில் நன்றிக்குரியது. திமுக அணிந்திருப்பது ஈரோட்டுக் கண்ணாடியல்லவா? அந்தத் தொலைநோக்குப் பார்வை எப்படி இல்லாமல் இருக்கும்?



அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்டின் 22 மொழிகளையும் ஆட்சி மொழியாக்குவதைத் திமுக தொடர்ந்து வலியுறுத்தி வருவதைக் காண முடிகிறது. மொழிக்காக இன்னுயிர் ஈந்த ஈகியர்கள் கனவை நனவாக்கும் வண்ணம் மத்திய மாநில அரசுகள் அமையவேண்டியது அவசியம். இருந்தாலும் ஆந்திராவில், கேரளாவில், கர்நாடகத்தில், வங்காளத்திலும் தற்போது மொழியுணர்வு எழுச்சியடைந்துள்ளது. அரசியல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வலியுறுத்திய பொதுக்குழுவின் தீர்மானம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்து இன்னும் எழுச்சி கண்டால் நம் கனவு நினைவாகும் காலம் தொலைவில் இல்லை.

***'We believe in ballot, rather than bullet'*** என்றார் அண்ணா. அத்துணை மேன்மை வாய்ந்த ஜனநாயகம் இன்னும் மேன்மையடையத் தேர்தல் முறைகளில் சீர்திருத்தம் தேவை. அரசியல் கட்சிகள் தாம் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் விகிதாச்சார முறையிலான பிரதிநிதித்துவம் தேவையென திமுகவின் பொதுக்குழு வலியுறுத்துவது இன்று ஜனநாயக தேர்தல் முறைகளில் நிலவும் ஓட்டைகளை நிரப்பும். அதுவே காலத்தின் கட்டாயமும் கூட.

தலைவர் தளபதி அவர்களின் சிறப்புத் தீர்மானம் தவிர்த்து 20 தீர்மானங்கள் மக்கள் எண்ணங்களைப் பிரதிபலிப்பதாகவே இருந்தது.

பொய்யிலே பிறந்து பொய்யிலே வாழ்ந்து வரும் அதிமுகவின் தமிழர் விரோத நிலைப்பாட்டையும், இரட்டை வேடத்தையும் கண்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிகவும் முக்கியமானது. இந்தித் திணிப்பு, ஜி.எஸ்.டி, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வு, ஹைட்ரோ கார்பன் திட்டம், முத்தலாக் மசோதா என அனைத்தையும் எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டே அதனை முழுவீச்சில் ஆதரித்துச் செயல்படுத்துவது என்பதை பாஜக முதலாளிகள் போட்ட எலும்புத் துண்டுகளுக்குக் காட்டும் விசுவாசமாக எண்ணி வாழும் அதிமுகவின் போக்கைப் பொதுக்குழு கண்டிக்கிறது.

நெடுஞ்சாலைத்துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, உள்ளாட்சித்துறை, மின்சாரத்துறை, தொழில்துறை என அனைத்துத் துறைகளையும் ஊழலில் திளைக்கவிட்டுள்ள அமைச்சர் பெருமக்கள், வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துக் குவித்து வைத்திருக்கும் துணை முதல்வர் என அனைவரும் தாங்கள் மாட்டிக்கொள்வோம் என்ற பயத்தில், மத்தியில் ஆளும் பாஜக அரசின் இரட்டையர்களுக்கு வாழ்நாள் அடிமைகளாகத் தங்களை வரித்துக் கொண்டுள்ளனர்.

இந்த அடிமைகள் தொடர்ந்து தமிழகத்தின் உரிமைகளைக் காவிக் காற்றில் பறக்க விட்டுவிட்டு மாநில உரிமைகளைக் காப்போம் என ஒப்புக்குக் கூவுகிற கபட வேட நிலைப்பாட்டைச் சரியான தருணத்தில் கண்டித்துள்ளது திமுகவின் பொதுக்குழு.

இறுதியாக, தனது தலையாய கொள்கையென முன்னிறுத்தி சமூக நீதிக்கான அடுத்த கால்கோளை நடும் விதமாக நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் நம் நூற்றாண்டு காலக் கனவை மெய்ப்பிப்பதாக அமைந்துள்ளது.

ஏற்கனவே நடப்பில் உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு வரைமுறைகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை. அதைப் பின்பற்றி அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. அதனைச் சுட்டிக்காட்டியதோடு இட ஒதுக்கீட்டின் பலனான சமூக நீதி முழுமையடைய பிற்படுத்தப்பட்டோருக்காக உள்ள 27 சதவிகித ஒதுக்கீட்டை 50 சதவிகிதமாக உயர்த்தி அந்த வகுப்பினருக்கு நீதி வழங்கிடப் பொதுக்குழுவில் வலியுறுத்தப்பட்டது.

"பொருளாதாரத்தில் பின்தங்கிய இதர வகுப்பினர்" என்ற மத்திய அரசின் சூழ்ச்சியைக் கண்டித்ததோடு அந்த வரையறையைத் திரும்பப் பெற வலியுறுத்தியது பொதுக்குழு.

நியாயமாகச் செய்யவேண்டுமெனில் அரசுத் துறைகள் மட்டுமன்றி, தனியார் துறைகளிலும் 100 சதவிகிதம் அனைத்து மக்களையும் இட ஒதுக்கீடு கொள்கை வரையறைக்குள் கொண்டு வந்து, மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என ஒதுக்கப்பட்ட அனைவருக்கும் சமூக நீதி கிடைக்கச் செய்வதே சமூகத்தின் சமமான சரிவிகித வளர்ச்சிக்குத் துணை நிற்கும்.

திமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள் சமூக, அரசியல், தளங்களில் விவாதிக்கப்பட்டு அது நடைமுறைக்கு வருமெனில் தமிழகம் இன்னும் ஒரு படி மேல் எழும்பும் என்ற நம்பிக்கை துளிர்கிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திமுக பெற்ற வெற்றி என்பது இந்தியாவில் வேறு எங்கும் கிடைத்திராத வெற்றி. ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடியின, சிறுபான்மையினர் மற்றும் சமூக நலன் பேணும் மக்களின் உண்மைப் பிரதிநிதிகளாக மக்களவைக்குச் சென்றுள்ளவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த 38 உறுப்பினர்கள் மட்டுமே என நாம் மார்தட்டிச் சொல்லலாம்.

அவ்வாறு பெரும் வெற்றிக்குப் பின் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டமாயினும் தலைவர் தளபதி ஆர்ப்பரிக்கவில்லை. அசைக்க முடியாத சக்தியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டாலும், பக்குவப்பட்ட, பணிவு நிரம்பிய, பெருந்தன்மை வாய்ந்த தலைவராக அவர் திகழ்கிறார். ஆயிரம் வசையம்புகள் அவரை நோக்கி வந்தாலும் அவர் மக்களை நோக்கி எப்போதும் வருகிறார். அவர் பண்பைப் போற்றி அவர் பின்னால் அணிவகுப்பதே தமிழர்களான நமது கடமை.

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,